பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

27 07 2024 **SATURDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நித்தி ஆயோக்கின் 9-வது நிர்வாகக் குழுக் கூட்டம், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் தற்போது புதுதில்லியில் நடைபெற்று வருகிறது.

2. அகில இந்திய வானொலியில் பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சி, நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

3. இதுவரை ஐந்து கோடிக்கும் அதிகமானோர் வருமான வரி தாக்கல் செய்துள்ளதாக வருமானவரித்துறை தெரிவித்துள்ளது.

4. ஏமன் நாட்டின் மீது அமெரிக்கா, இங்கிலாந்து கூட்டு படையினர் வான்வழி தாக்குதலில் ஈடுபட்டதாக ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

5. இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான முதலாவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டி இன்றிரவு நடைபெறுகிறது.

---- இனி விரிவான செய்திகள் --

**<<<<<<>>>>>**

நித்தி ஆயோக்கின் 9வது நிர்வாகக் குழுக் கூட்டம், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் தற்போது புதுதில்லியில் நடைபெற்று வருகிறது.

வளர்ச்சியடைந்த பாரதம் 2047 என்ற கருப்பொருளில் இந்த ஆண்டுக்கான கூட்டம் நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்தில் வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான திட்ட அறிக்கை குறித்து விவாதிக்கப்படுகிறது.

மேலும், வளர்ச்சியடைந்த பாரதத்தை அடைவதற்கு மாநில அரசுகள் எந்தவிதத்தில் துணைபுரிய முடியும் என்றும் இதில் ஆலோசிக்கப்படுகிறது.

**<<<<<<>>>>>**

அகில இந்திய வானொலியில் பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சி, நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

இது 112-ஆவது நிகழ்ச்சியாகும். மூன்றாவது முறையாக பதவியேற்ற பின் பிரதமர் திரு நரேந்திர மோடியின் இரண்டாவது உரையாகும்.

பிரதமரின் உரையை அகில இந்திய வானொலியின் அனைத்து வானொலி நிலையங்களும் ஒலிபரப்பு செய்யும்,

தூர்தர்ஷன், அகில இந்திய வானொலியின் இணையதளம், செயலி ஆகியவற்றிலும் இதனை கேட்கலாம்.

அகில இந்திய வானொலி, டி டி நியூஸ், பிரதமர் அலுவலகம், தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் ஆகியவற்றின் யூ டியூப் சேனல்களிலும் இதனை கேட்கலாம்.

பிரதமர் உரைக்குபின் இதன் தமிழாக்கம் ஒலிபரப்பாகும்.

<<<<<<>>>>>

மத்திய ரிசர்வ் காவல் படை தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள சமூக வலைதள பதிவில், நாட்டிற்காக பல தியாகங்களை செய்து தொடர்ந்து பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டுவரும் வீரர்களின் சேவையை தாம் பாராட்டுவதாக கூறியுள்ளார்.

நாட்டின் பாதுகாப்பை முன்னிலைப்படுத்தி, தங்களது வீரத்தையும், தீரத்தையும் இந்த படை வீரர்கள் வெளிப்படுத்திக்கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், நாட்டின் பாதுகாப்பில் இந்த படை வீரர்கள் அதிக கவனம் செலுத்தி வருவதாகவும், தங்களது இன்னுயிரை அர்ப்பணித்து நாட்டை பாதுகாப்பதில் அவர்களின் வீரத்தை போற்றுவதாகவும் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

இதுவரை ஐந்து கோடிக்கும் அதிகமானோர் வருமான வரி தாக்கல் செய்துள்ளதாக வருமானவரித்துறை தெரிவித்துள்ளது.

நேற்று வரை 2024-25-ஆம் ஆண்டுக்கான வருமான வரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது கடந்த ஆண்டை காட்டிலும் அதிகமானது என்று அத்துறை தெரிவித்துள்ளது.

இம்மாதம் 31-ஆம் தேதிவரை வருமான வரி கணக்குகளை தாக்கல் செய்யலாம்.

இதுவரை தாக்கல் செய்யாதவர்கள் விரைவாக தாக்கல் செய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

வருமான வரி தாக்கல் செய்துள்ள அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதாக வருமானவரித்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ பி ஜே அப்துல் கலாமின் ஒன்பதாவது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்தியாவின் விண்வெளி மற்றும் ஏவுகணை திட்டங்களில் மிக முக்கிய பங்காற்றியவர்.

ஏவுகணை மனிதர் என்று புகழாரம் சூட்டப்பட்டார்.

இந்நாளையொட்டி, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா விடுத்துள்ள சமூக வலைதள பதிவில், டாக்டர் அப்துல் கலாம், எளிமை, கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றின் அடையாளமாக திகழ்ந்தவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் எண்ணற்ற இளைஞர்களுக்கு உத்வேகம் அளிக்கக்கூடியவராக அவர் இருந்தார் என்றும் தெரிவித்துள்ளார்.

அவரது சிந்தனைகள் எதிர்கால தலைமுறையை ஊக்கப்படுத்துவதாக உள்ளது என்றும் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் விடுத்துள்ள சமூக வலைதள பதிவில், உலகின் அறிவியல் அரங்கில் நமது தேசத்தின் திறமை மிக்க பரிமாணத்தை முன்வைத்த அறிவியலாளராக அப்துல் கலாம் திகழ்ந்தார் என்றும், தனது எளிமையான செயல்பாடுகள் மூலம் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைத்து மக்களாலும் விரும்பப்பட்ட தலைவராக வாழ்ந்தவர் என்றும் தெரிவித்துள்ளார்.

ஆந்திரப்பிரதேச ஆளுநர் திரு அப்துல் நசீத் மற்றும் அம்மாநில முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு ஆகியோரும் அன்னாருக்கு புகழஞ்சலி செலுத்தியுள்ளனர்.

இந்நாளையொட்டி, ராமேஸ்வரம் அருகே பேக்கரும்பில் உள்ள டாக்டர் அப்துல் கலாம் நினைவிடம் வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.தலைவர்களும் உள்ளூர் மக்களும் அங்கு மலரஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

<<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரின் குப்வாரா மாவட்டத்தில் கம்காரி அருகே நடைபெற்ற துப்பாக்கிச்சண்டையில் அடையாளம் தெரியாத ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சுட்டுக்கொல்லப்பட்டவர் பாகிஸ்தானை சேர்ந்தவர் என்று பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.

இந்த சண்டையில் இரண்டு ராணுவ வீரர்கள் காயமடைந்தனர்.

அந்த பகுதியில், துப்பாக்கிச்சண்டை தொடர்ந்து நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

மக்களுடன் முதல்வர் திட்டத்தின் செயல்பாடுகள் தொடர்பாக தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

சென்னை தலைமைச்செயலகத்தில் காணொலி வாயிலாக நடைபெற்ற இந்த ஆலோசனை கூட்டத்தில், மதுரை, தூத்துக்குடி, நாகப்பட்டினம், வேலூர் ஆகிய உள்ளிட்ட ஐந்து மாவட்டங்களின் ஆட்சியர்கள் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>>

கர்நாடகா மற்றும் கேரளாவில் தொடர்ந்து கனமழை பெய்துவருவதையடுத்து, மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்துள்ளது.

இன்று மேட்டூர் அணையின் நீர்மட்டம் 100 அடியை எட்டியுள்ளது.

71-ஆவது முறையாக 100 அடியை மேட்டூர் அணை எட்டியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - விஜயகுமார் - 45 செகண்ட்ஸ்)*

இதனிடையே, ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து வினாடிக்கு ஒரு லட்சத்து 16 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

<<<<<<>>>>>

ஏமன் நாட்டின் மீது அமெரிக்கா, இங்கிலாந்து கூட்டு படையினர் வான்வழி தாக்குதலில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்நாட்டின் வடமேற்கு பகுதியில் உள்ள செங்கடல் பகுதியை அடுத்த **'Alluhayah '** என்னும் மாவட்டத்தில் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து நான்கு முறை இந்த வான்வழி தாக்குதல் நடத்தப்பட்டதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். <<<<<<>>>>>

அமெரிக்க அதிபர் தேர்தலில், போட்டியிடுவதை திருமதி கமலா ஹாரிஸ், அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்பத்தில் அவர் கையெழுத்திட்டுள்ளார்.

நவம்பர் மாதம் நடைபெறவுள்ள தேர்தலில், மக்கள் ஆதரவுடன் தாம் வெற்றிபெறுவேன் என்று சமூக வலைதள பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த தேர்தலில் தாம் கடுமையாக பணியாற்றி, மக்களின் ஒவ்வொரு வாக்குகளையும் சேகரிக்கப் போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

குடியரசு கட்சியின் சார்பில் போட்டியிடும் திருமதி கமலா ஹாரிஸூக்கு அக்கட்சியின் தலைவர்களில் ஒருவரும், முன்னாள் அமெரிக்க அதிபருமான திரு பராக் ஒபாமா தமது ஆதரவை தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

மகாராஷ்ட்ராவின் மத்திய பகுதி, மராத்துவாடா, மத்தியப்பிரதேசம், ஹரியானா, சத்தீஸ்கர், விதர்பா, கொங்கன், கர்நாடகாவின் தெற்குப்பகுதி மற்றும் கோவாவில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும் சௌராஷ்ட்ரா, கட்ச் மற்றும் குஜராத்தின் சில பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

உத்தராகண்ட், ராஜஸ்தான், இமாச்சலப்பிரதேசம், உத்தரப்பிரதேசம், கேரளா, மாஹே, ஜம்மு காஷ்மீர், லடாக் மற்றும் கில்ஜித் ஆகிய பகுதிகளில் வரும் 29-ஆம் தேதிவரை கனமழை பெய்ய வாய்ப்பிருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு மாநிலங்கள், தெற்கு பெனிசுலா, நாட்டின் மத்தியப்பகுதிகளில் அடுத்த ஐந்து நாட்களுக்கு பரவலான, மிதமான மழை பெய்வதற்கு வாய்ப்பிருப்பதாகவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, தமிழகத்தில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள அவலாஞ்சி மற்றும் பவானி ஆகிய நீர்பிடிப்புப்பகுதிகளில் நல்ல மழை பெய்துள்ளது.

அடுத்த சில நாட்களுக்கு மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான முதலாவது டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

கொழும்புவின் **Pallekele –**ல் நடைபெறும் இப்போட்டி இரவு ஏழு மணிக்கு தொடங்குகிறது.

இந்த தொடரில் மூன்று டுவென்டி – டுவென்டி போட்டி மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகளில் இரு அணிகளும் பங்கேற்கின்றன.

**<<<<<<>>>>>**

பாரிஸில் நடைபெற்றுவரும் ஒலிம்பிக் போட்டியில் இந்திய வீரர்கள் பல்வேறு பிரிவுகளில் இன்று களம் காண்கின்றனர்.

சற்றுமுன் தொடங்கிய துப்பாக்கிச்சுடும் போட்டியின் பத்து மீட்டர் ஏர் ரைபிள் கலப்பு குழு பிரிவு தகுதி சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் இளவேனில் வாலறிவன், சந்தீப் சிங், அர்ஜுன் பபுதா, ரவிதால் ஜிண்டால் ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

இப்போட்டியின் ஆடவர் பிரிவில் அர்ஜுன் சிங் சீமா மற்றும் **'Sarabjot Singh** பங்கேற்கின்றனர்

மகளிர் பிரிவில் மனு பாக்கர் மற்றும் ரித்தம் சங்வான் பங்கேற்கின்றனர்.

தற்போது நடைபெற்றுவரும் ஆடவர் ஒற்றையர் துடுப்பு படகு போட்டியில் இந்தியாவின் பல்ராஜ் பன்வார் பங்கேற்றுள்ளார்.

டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா - ஸ்ரீ ராம் பாலாஜி இணை, பிரான்ஸ் இணையை எதிர்கொள்கிறது.

ஹாக்கிப்போட்டியில் இந்தியா – நியூசிலாந்தை எதிர்கொள்கிறது.

பேட்மிண்டன், டேபிள் டென்னிஸ், குத்துச்சண்டை ஆகிய போடடிகளிலும் இந்திய வீரர்கள் இன்று பங்கேற்கின்றனர்.

**<<<<<<END>>>>>**